[1975 நவம்பர் 12

மகேந்திரவாடி கால்வாயின் குறுக்கே பாலம்.

*332 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா வட்டம் (வட ஆற்காடு), பூண்டி கிராமத்தில் இருந்து சென்னசமுத்திரம் இடையே மகேந்திரவாடி கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : இது மகேந்திரவர்ம பல்லவனால் வெட்டப்பட்ட கால்வாய். இது பல கிராமங்களுக்கும் மக்கள் போக்கு வரத்திற்கும் இடையூறாக இருக்கிறது. இதில் நம்முடைய அரசு முயற்சி எடுத்து ஒன்றியத்தின் அளவிலாவது அவர்களுடைய நேரடி மேற்பார்வையின்கீழ் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது குறிப்பிட்ட இரண்டு ஊர்களுக்கு இடையில் கட்டப்படுகிற பாலத்தைப் பற்றிய திட்டம் என்று கூறப்பட்டாலும், இதே போன்று இன்னும் பல ஊர்களுக்கு இடையில் இந்தக் கால்வாய் ஓடுகிறது. இந்த வாய்க்கால்களுக்குப் பாலம் கட்டுவதற்கு ரூ. 1¼ லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குத் தற்போது நமது திட்டத்திலே வேண்டிய தொகை ஒதுக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராம நதியின் குறுக்கே பாலம்.

*333 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, ரவணசமுத்திரம் கிராமத்தையும், கோவிந்தபேரி கிராமத்தையும் இணைக்கும் வகையில் ராமநதியில் தாம்போகி பாலம் கட்டுவதுகுறித்து அரசு ஆய்வுசெய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1975 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இந்தப் பகுதியில் நீண்ட காலமாகப் பாலம் கட்டவேண்டுமென்று இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் கேட்டு வருகிறார்கள். பாலம கட்டுவது மகவும் அவசியமானதாகத் தெரிகிறது. இதை ஆய்வு செய்வதற்கு அரசாங்கம் உத்திரவிடத் தீர்மானத்திருக்கிறதா? மாவட்ட ஆட்சித் தலைவர் இதுபற்றி எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அமைச்சரவர்கள் இதுபற்றி விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தப் பாலம் கட்டுவதற்கு ரூ. 4½ லட்சம் செலவாகும் என்று தெரிகிறது. ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களை முதலில் நிறைவேற்றியாக வேண்டியிருக்கிறது.

கொமட்டேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

*334. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குளித்தலை வட்டம், வீரியபாளையம ஊராட்சியைச் சேர்ந்த கொமட்டேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) இதுவரை மேற்படி பணி பூர்த்தியடையாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 1968-ம் ஆண்டு மார்ச் திங்களில் இப்பணி தொடங்கப்பட்டது.

(இ) 1971-ம் ஆண்டு மார்ச் திங்களிலேயே பணி முழுவதும் முடிந்துவிட்டது.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பணி முடிந்துவிட்டது என்று பதில் சொன்னார்கள். கடந்த வாரம்கூட அந்த ஊராட்சி மன்றத்தின் தலைவர்